# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106

## செய்தி தகவல்

செய்தி தகவல் எண் : 18/2016 நாள் : 23.09.2016

### தேர்தல் செலவினத்திற்கான உச்ச வரம்பு

உள்ளாட்சித் தேர்தல் 2016–ல் ஊரக உள்ளாட்சி பகுதியில் கிராம ஊராட்சித் தலைவர், கிராம வார்டு உறுப்பினர், ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர், மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் மூன்றாம் நிலை நகராட்சி/பேரூராட்சி வார்டு உறுப்பினர், நகராட்சி வார்டு உறுப்பினர் (இரண்டாம் மற்றும் முதல் நிலை), நகராட்சி வார்டு உறுப்பினர் (தேர்வு மற்றும் சிறப்பு நிலை), மாநகராட்சி வார்டு உறுப்பினர் (சென்னை மாநகராட்சி தவிர), சென்னை மாநகராட்சி வார்டு உறுப்பினர் ஆகிய தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்களின் தேர்தல் செலவு உச்ச வரம்பு கீழ்கண்டவாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | ஊரக உள்ளாட்சி அமைப்புகள் | 2011–ல் நிர்ணயிக்கப்பட்ட தொகை | தற்பொழுது 2016–ல் நிர்ணயிக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 1. | மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் தேர்தல் | 1,12,500 | 1,70,000 |
| 2. | ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் தேர்தல் | 56,250 | 85,000 |
| 3. | கிராம ஊராட்சித் தலைவர் தேர்தல் | 22,500 | 34,000 |
| 4. | கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் தேர்தல் | 5,625 | 9,000 |

| வ.எண் | நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | 2011–ல் நிர்ணயிக்கப்பட்ட தொகை | தற்பொழுது 2016–ல் நிர்ணயிக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 1. | பேரூராட்சி மற்றும் மூன்றாம் நிலை நகராட்சி வார்டு உறப்பினர் தேர்தல் | 11,250 | 17,000 |
| 2. | நகராட்சி வார்டு உறுப்பினர் தேர்தல் (இரண்டாம் மற்றும் முதல்நிலை) | 22,500 | 34,000 |
| 3. | நகராட்சி வார்டு உறுப்பினர் தேர்தல் (தேர்வு மற்றும் சிறப்பு நிலை) | 56,250 | 85,000 |
| 4. | மாநகராட்சி வார்டு உறுப்பினர் தேர்தல் (சென்னை மாநகராட்சி தவிர) | 33,750 | 85,000 |
| 5. | சென்னை மாநகராட்சி வார்டு உறுப்பினர் தேர்தல் | 56,250 | 90,000 |

இத்தகவல் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் தெரிவிக்கப்படுகிறது.

23.09.16.

மக்கள் தொடர்பு அலுவலர்